**களுத்துறை நகர சபை - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

களுத்துறை நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள களுத்துறை நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியமத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| • மீளாய்வாண்டின் இறுதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் வைப்புக்களின் அதிகரிப்பு ரூபா 40,466 ஆக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் வைப்புக்களின் அதிகரிப்பு ரூபா 103,291 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 62,825 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 103,291 தொகை சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| • செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் நடவடிக்கைகளில் காசுப்பாய்ச்சல் கூற்று கணிப்பிடும் போது இருப்பில் அதிகரிப்பாக நிலையான சொத்துக்களில் உள்ள பொருள் பதிவேட்டு இருப்புக்களின் மாற்றல்கள் மூலம் ரூபா 2,932,194 தொகை இருப்பில் அதிகரித்து காசு வெளிப்பாய்ச்சலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சலாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் ஏற்பட்டிருந்தமையால் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | - மேற்படி - |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கட்டுகுருந்த சிகிச்சை நிலைய கட்டிடத்தின் விறாந்தை மற்றும் எல்லை மதிலை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,411,054 கட்டிடக் கணக்கில் வரவு வைப்பதற்கு பதிலாக மீண்டெழும் செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | பழுதுபார்க்கப்படுகின்ற நிலைமைக்கு உட்பட்டிருந்தமையால் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டில் வீதி மற்றும் வடிகாண் நிர்மாணிப்பதற்கு செலவாகிய ரூபா 1,357,736 கிரயம் பாலம், மதகு மற்றும் வீதிகளுக்கு வரவு வைப்பதற்கு பதிலாக புனரமைப்பு செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது குறைபாடுகள் சரி செய்யப்படும். | - மேற்படி - |
| (இ) மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 260,518 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | காலவதியாகும் தினத்திற்கு முன்னர் சரியான வட்டி கணிப்பீடு செய்ய முடியாமையால் வட்டியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் மிகையில் இனங்காணப்பட்ட மூலதன செலவின மானியம் ரூபா 1,733,436 விரிவான வருமானக் கூற்றில் நடைமுறையல்லா செலவினத்திற்காக அரசாங்கத்தின் மாற்றல்களாக காண்பிக்கப்படாமையால் ஆண்டின் மிகை அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு பந்தியில் குறிப்பிடப்பட்ட ரூபா 1,733,436 தொகை 2020.12.31 இல் உள்ளவாறு இனங்காணப்படாத மூலதன மானியங்களில் வைக்கப்பட வேண்டிய மீதியாக இருந்ததுடன் மீளாய்வாண்டில் விரிவான வருமானக் கூற்றில் நடைமுறையல்லா செலவினங்கள் அரசாங்கத்தின் மாற்றல்களில் உள்ளடங்கியிருந்தது. | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 540,615 தொகையான நூலகப் புத்தகங்களுக்காக கிடைத்த ரூபா 77,615 கழிவு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படாமையால் நூலக புத்தகங்கள் ரூபா 77,615 தொகையும் வருமானம் ரூபா 77,615 தொகையும் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற மூலதன மானியம் ரூபா 178,075 ஆக இருந்த போதும் விரிவான வருமானக் கூற்றில் மூலதன செலவின மானியமாக 2021 சனவரி 01 இல் உள்ளவாறு இனங்காணப்படாத மூலதன மானியக் கணக்கின் மீதியாக ரூபா 805,572,543 காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் விரிவான வருமானம் ரூபா 805,394,468 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையை தவிர்க்கும் போது கவர்ச்சிகரமான எண்ணக்கரு மற்றும் அனுமாண அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (எ) | முன்னைய ஆண்டில் கிடைக்கப்பெற்ற மூலதன மானியம் ரூபா 1,733,436 தொகையினால் மீளாய்வாண்டின் மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்பட வேண்டிய மூலதன மானியம் ரூபா 123,472 ஆக இருந்த | கணக்கீட்டு கொள்கை இலக்கம் 3.4 இன் கீழ் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

போதும், ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் அது ரூபா 26,520,484 ஆக அதாவது ரூபா 26,397,012 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிகளுக்கும் அதற்கு நேரொத்த அறிக்கைகளில் காணப்படுகின்ற பெறுமதிகளுக்கும் இடையே ரூபா 439,314 வேறுபாடு காணப்பட்டது. | பொது மலசலகூட வருமான தலைப்புக்கள் சிலவற்றின் கீழ் உரிய பிரிவுகளினால் விநியோகிக்கப்பட்டுள்ள மற்றும் இறைச்சிக் கடை வருமானம் நடமாடும் எல்லை விதிக்கப்பட்ட காலத்தில் அறவிட முடியாத வருமானமாக இருந்தது. | நிதிக்கூற்றுக்களின் மீதியும் பட்டோலைகளின் மீதியும் சமனாக இருத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,481,432 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,892,054 ஆகும்.

### 2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிலுவை ஆதனவரி காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 10 வருடங்களை விஞ்சிய பழைய நிலுவை ரூபா 1,548,977 தொகையும், 05-10 வருடங்களுக்கு இடையிலான நிலுவை ரூபா 1,667,598 தொகையும், 03-05 வருடங்களுக்கு இடையிலான நிலுவை ரூபா 2,459,020 தொகையும் அறவிட வேண்டிக் காணப்பட்டது. | மேலும் அறவிடப்படவுள்ள தொகை ரூபா 27,120,597 ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் | பட்டோலைகள் கிடைத்தவுடன் அந்த | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2018 முதல் 2021 இற்கு இடையிலான காலத்திற்காக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 48,392,774 ஆகும். | ஆவணங்களை தயாரித்து மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 41-7330 என்ற இசுசு லொறி வண்டியின் இன்ஜினை பழுதுபார்ப்பதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு 2020 செப்தெம்பர் 23 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த லொறி வண்டியை பழுதுபார்த்து மீண்டும் சபைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொரோனா தொற்றுநோயினால் இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையால் உதிரிப்பாகங்களை கொண்டு வருவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. மிகவும் விரைவாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விரைவாக பழுதுபார்த்து வாகனத்தை சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் அலுவலக செயற்பாடுகளை கணனி மயப்படுத்துவதற்காக ரூபா 5,014,500 பெறுமதியான 10 துணைப்பாகங்களை உள்ளடக்கிய கணனி மென்பொருள் முறைமையொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 05 துணைப் பாகங்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் 05 துணைபாகங்கள் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வருமான முகாமைத்துவ முறைமையை நூற்றுக்கு நூறு சதவீதம் அமுல்படுத்தியதுடன் ஏனைய முகாமைத்துவ முறைமையும் 2022 ஆம் ஆண்டளவில் நூற்றுக்கு நூறு வீதம் அமுல்படுத்தப்படும். | சொத்துக்களை குறைவாக பயன்படுத்தா திருத்தல் வேண்டும். |